## திராவிடத் தத்துவத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லத் தகுதியானவர் உதயநிதி ஸ்டாலின்!

# எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை வழிநடத்தத் தகுதியுள்ள தம்பி, நீ வா !

## திருவண்ணாமலை – கழக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பில் ஆ.இராசா எம்.பி. உரை!

**திருவண்ணாமலை, ஜன. 1–**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற – கழக இளைஞரணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பில் – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரையாற்றுகையில், ‘‘திராவிடத் தத்துவத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லத் தகுதியானவர் உதயநிதி ஸ்டாலின்’’ என்றும், ‘‘எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை வழிநடத்தத் தகுதியுள்ள தம்பி, நீ வா!’’ என்றும் குறிப்பிட்டார்.**

**இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:–**

ஒரு அரை நூற்றாண்டுக்கு 5 ஆண்டுகள் குறைவு - நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், 1980-ஆவது ஆண்டு ஜூலை மாதம் 20-ஆம் தேதி மதுரையில் தொடங்கப்பட்ட அணி தி.மு.கழகத்தின் இளைஞரணி. அந்த இளைஞரணியைத் தொடங்கிவைத்த நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முழக்கத்தை முன்வைத்தார்.

**● “நாங்கள் பெரியாரின் தொண்டர்கள் - அண்ணாவின் தம்பிகள்;**

**● எங்கள் கால்கள் நடப்பதை நிறுத்தாது; நடந்து கொண்டே இருப்போம்.**

**● எங்கள் கைகள் எழுதுவதை நிறுத்தாது; எழுதிக் கொண்டே இருப்போம்.**

**● எங்கள் உதடுகளும், நாவுகளும் பேசுவதை நிறுத்தாது; பேசிக் கொண்டே இருப்போம்.**

**● ஏன் என்றால், நாங்கள் ஒரு மிகப் பெரிய அழுத்தமான கொள்கைக்குச் சொந்தமானவர்கள்.**

நாங்கள் பெரியாரின் தொண்டர்கள் -அண்ணாவின் தம்பிகள்” என்று அந்த முழக்கத்தை முடித்தார்.

நாற்பந்தைத்து ஆண்டு காலம் உருண்டோடிவிட்டது. அன்றைக்கு சில நூறு பேர், நான் பட்டப்படிப்பை துவங்கியிருந்த முதல் ஆண்டு. ஆனால் நான் இன்றைக்கு இந்த மேடையைப் பார்க்கிறேன்; மைதானத்தைப் பார்க்கிறேன்; எவ்வளவு பெரிய எழுச்சி. இந்த இளைஞரணி எவ்வாறு உருக்கொண்டு, இன்றைக்கு ஆருயிர் இளவல் உதயநிதி ஸ்டாலின் என்ற இளம் தலைவரால் மிகப்பெரிய உயரத்தை - சிகரத்தை எட்டியிருக்கிறது. திருவண்ணாமலையில் நடைபெறும் இந்த மண்டல இளைஞர் அணி மாநாட்டில் உரையாற்றும் வாய்ப்பை கழகத் தலைவர் அவர்கள் எனக்கு வழங்கியிருக்கிறார்கள்; அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம் வரை நிர்வாகிகள்!

நான் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள அரசியல் கட்சிகளை எல்லாம் தேடிப் பார்க்கிறேன். தமிழ்நாட்டில் தி.மு.க.விற்கு 76 ஆயிரம் கிளைக் கழகங்கள்; அந்த ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் ஒரு இளைஞரணி அமைப்பாளர்; 3 துணை அமைப்பாளர்கள்; இதில் மட்டும் 3 லட்சம் நிர்வாகிகள். ஒவ்வொரு கிளைக்கும் சேர்த்து தமிழ்நாட்டில் 3 லட்சத்து 4 ஆயிரம் பேர் இளைஞரணியின் நிர்வாகிகள் இருக்கிறார்கள். 68 ஆயிரம் வாக்குச்சாவடிகள் உள்ளன. 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளுக்கும் பாகமுகவர்கள் இளைஞரணியின் சார்பில் இருக்கிறார்கள். சென்னை போன்ற பெருநகரங்களில் பாகத்தின் பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள், அவர்கள் 2 லட்சம் பேர். எனவே, ஏறத்தாழ 5 லட்சம் பேரை கிளைக் கழகம் தொடங்கி, தலைமைக் கழகம் வரை நிர்வாகிகளாக இளைஞர்களைப் பெற்றிருக்கிற ஒரு இயக்கம், இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே உண்டு என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம். அந்தப் பெருமையைச் செய்து காட்டிய ஒரு மகத்தான இளந்தலைவனாக ஆருயிர் இளவல் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களை நான் பார்க்கிறேன். அவரை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அதுவும் சாதாரண முறையிலா? இப்போது காணொலி வாயிலாக காண்பித்தார்களே, மாவட்ட அமைப்பாளர்களை - துணை அமைப்பாளர்களை நேர்காணல் செய்து, அதற்கு கீழே இருக்கும் நிர்வாகிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி, முறைப்படி தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

### இயக்கத்தின் கட்டுமானம்!

நான் வரலாற்றை எண்ணிப் பார்க்கிறேன். 1993-ஆம் ஆண்டு இந்த இயக்கத்திற்கு ஒரு சோதனை வந்த நேரத்தில், தஞ்சையில் பொதுக் குழுவை அண்ணன் கோ.சி. மணி அவர்கள் முன்னின்று கூட்டி, இந்த இயக்கம்தான் உண்மையான திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை தேர்தல் ஆணையத்தில் நிரூபிப்பதற்காக பொதுக் குழு தீர்மான ஆவணங்களை - கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம் வரை உள்ள அமைப்பு முறைகளையெல்லாம் கொண்டு போய் சேர்த்து வாதிட்டபோது, அன்றைக்கு தேர்தல் ஆணையத்தின் தலைவராக இருந்த டி.என்.சேஷன் சொன்னார், “*The only Political Party Democraticly and Legally structured is DMK in the Country*”. “இப்படி ஒரு தேர்தல் அமைப்பு முறையை - இப்படி ஒரு கட்டுமானத்தை - ஜனநாயகத்தை, நான் வேறு எந்த அரசியல் கட்சியிலும் இந்தியாவில் காணவில்லை” என்று 1993-லேயே சொன்னார்.




“கொட்டுகின்ற மழையில், வீசுகின்ற புயலில், சரளைக்கற்கள் நிரம்பிய மலை உச்சியை நோக்கி நாம் நடக்கிறோம்; கையிலே ஒரு அகல் விளக்கு; அந்த அகல் விளக்கு அணையாமல் இருப்பதற்கு, தம்பிமார்களே... உங்கள் கைகளின் அரவணைப்பைத் தாருங்கள்” என்று சில நூறு பேர்களை வைத்துக்கொண்டு, சென்னை ராபின்சன் பூங்காவிலே தொடங்கிய இந்த இயக்கம், அந்த இயக்கத்தின் இளைஞரணி இன்றைக்கு திருவண்ணாமலையில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் அமர்ந்து, 91 சட்டமன்றத் தொகுதிகளிலிருந்து - 21 கழக மாவட்டங்களிலிருந்து இத்தனை பேரை கட்டுப்பாடோடு கடமையாற்றும் பணியைச் செய்திருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய சல்யூட்... சல்யூட்... சல்யூட்...!

என்றைக்காவது ஒரு நாள் உலகத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளை எல்லாம் ஆய்வு செய்து, ‘இப்படி ஒரு இயக்கம் கட்டமைக்கப்பட்டிருக்க முடியுமா?’ என்று எவராவது ஆய்வு செய்தால், இவர் செய்திருக்கும் இந்த முன்முயற்சிதான்... சரித்திரம்... சரித்திரம்... சரித்திரம்...!

### பெரியாரைப் பற்றி கலைஞர் எழுதியது!

நான், இந்த இயக்கம் தோன்றிய மூலத்தை தம்பி உதயநிதியை வைத்துக் கொண்டு எண்ணிப் பார்க்கிறேன். தந்தை பெரியார் இந்த இயக்கத்திற்கு தத்துவத்தை தந்தார்; அண்ணன் வேலு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறபோது, “தந்தை பெரியாரை உதயநிதி வடிவத்தில் பார்க்கிறேன்” என்று சொன்னார். அந்த பெரியாரைப் பற்றி கலைஞர் எழுதினார்,

“எரிமலையாய்; சுடுதழலாய்; இயற்கைக் கூத்தாய்;

இறைவனுக்கே எதிர்ப்பு சொன்ன இங்கர்சாலாய்; ஏனென்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்;

எப்போதும் பேசுவதில் ஏதென்சு நகர் சாக்ரடீசாய்

எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.”

பம்பரமும் ஓய்வு பெறும் சுற்றிய பின்...

இவரோ படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய் சுற்றி வந்தார்” என்று!

அண்ணா, பெரியார் தந்த தத்துவத்தை முன்னிறுத்தி ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டார். அப்போது பெரியாருக்கு மனச்சலிப்பு ஏற்பட்டது. ஏன் வாழ்கிறோம் என்ற விரக்தி ஏற்பட்டது என்று விடுதலையில் எழுதினார். அப்போது, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சையில் இருந்தார். பதறிப்போன அண்ணா பெரியாருக்கு கடிதம் எழுதினார், “தலைவர் அவர்களே... உங்களுக்கு ஏன் மனச்சலிப்பு. எனக்குத் தெரிய, உலகத்தில் எத்தனையோ புரட்சிகளைப் படித்திருக்கிறேன். இரஷ்யாவில் புரட்சி; ரஷியாவில் இரண்டு தலைவர்கள்: மார்க்ஸ், லெனின். பிரஞ்சுப் புரட்சிக்கு வால்டேர், ரூசோ என்று இரண்டு தலைவர்கள். இந்த புரட்சிகள் வெற்றி பெற இரண்டு நூற்றாண்டுகள். வெவ்வேறு காலக்கட்டம். தத்துவத்தைத் தந்தது ஒருவர்; அதை அடுத்த நூற்றாண்டில் அரியணையில் ஏற்றியவர் இன்னொருவர். ஆனால், எனக்குத் தெரிந்து ஒரு தத்துவத்தை ஒரு தலைவன் சொல்லி, அவருடைய வாழ்நாளிலேயே அத்தத்துவம் வெற்றி பெற்ற வரலாறு உங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட உங்களுக்கு ஏன் மனச்சோர்வு”? என்று கேட்டவர் பேரறிஞர் அண்ணா.

அந்த அண்ணா ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், ‘தமிழ்நாடு’ என்று இந்த நாட்டிற்குப் பெயர் சூட்டினார். “தமிழ்நாடு என்று பெயர் இருக்கும் வரை, இந்த நாட்டில் யார் முதலமைச்சராக இருந்தாலும், அண்ணாதுரைதான் தமிழ்நாட்டை ஆள்கிறான்” என்று அண்ணா சொன்னார். அதை இந்த மேடையிலே நான் எண்ணிப் பார்க்கிறேன். எத்தனை பெரிய வரலாறு இந்த இயக்கத்திற்கு? எத்தனை உயரிய தத்துவம்? எத்தனை கொள்கைத் தலைவர்கள்?

### கலைஞரின் சாதனைகளை சரித்திரம் பேசும்!

அண்ணா மறைவுக்குப் பிறகு, கலைஞர் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார். நான் நாடாளுமன்றத்தில் 20 ஆண்டுகள் காலத்திற்கு மேலாக இருக்கிறேன். தமிழுக்கு செம்மொழி மட்டுமல்ல; பெண்ணுக்கு சம உரிமை மட்டுமல்ல; ஆட்சியில் அவர் படைத்த சாதனைகள் சரித்திரம் பேசும்; கொள்கையில் அவர் எவ்வாறு பற்று கொண்டிருந்தார்?. 56 இன்ச் மார்பகலம் கொண்ட பிரதமர் மோடி அவர்கள் நாடாளுமன்றத்தில் சொன்னார், “சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஓடிவிட்டது. இன்னும் 40 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் சென்று சேரவில்லை. நான்தான் சேர்த்தேன். நேரு செய்யவில்லை; இந்திரா காந்தி செய்யவில்லை; நான்தான் செய்தேன்” என்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான விவாதத்தின் போது சொன்னார்.

நான், தி.மு.க. சார்பில் குடியரசுத் தலைவருக்கு நன்றி தெரிவித்து பேசுகிறபோது சொன்னேன், “பிரதமர் அவர்களே... இன்றைக்கு 2024-ல் 40 ஆயிரம் வீடுகளுக்கு நாங்கள் மின் இணைப்பு கொடுத்தோம் என்று சொல்கிறீர்களே... 1971-இலேயே அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை கொண்டு போய் சேர்த்த ஒரு தலைவர், கலைஞர் என்ற மகத்தான தலைவனை தலைவராக பெற்ற இயக்கம், எங்கள் இயக்கம்” என்று சொன்னேன். இவ்வாறு பெரியார் - அண்ணா - கலைஞர், இந்தத் தத்துவங்களை எல்லாம் தாங்கி இருக்கும் தலைவர் இங்கே இருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், திராவிட மாடல் அரசை இயக்கிக் கொண்டிருக்கிறார்.

### ஆற்றல் மிக்க தலைவன்!

பெரியார், தனிநாடு - திராவிட நாடு கேட்டார். அண்ணா, திராவிட நாட்டை - தனித் தமிழ்நாட்டை கைவிட்டுவிட்டு, மாநில சுயாட்சி கேட்டார். கலைஞர், மாநில சுயாட்சிக்காக சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டார். அவ்வாறு தீர்மானத்தோடு நிற்கவில்லை. இன்றைக்கு மாநிலத்தின் உரிமைகள் பறிக்கப்படுகிறபோது, நீட்டாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; உண்மையான இட ஒதுக்கீடு கோட்பாட்டை தவிர்த்து விட்டு, பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்கள் என்பதற்காக இட ஒதுக்கீடு தருகிறீர்களே... அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்; விஸ்வகர்மா திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; நாடாளுமன்றம் இயற்றுகிற சட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம்; “*Political will of the people reflected in the Parliament was rejected*”. ஆனால், எங்கள் சட்டமன்றத்தில் இந்த ஆட்சியின் நாயகர், “உங்கள் சட்டங்களை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்; நாங்கள், “*Out of Control to Delhi*” என்று சொல்லும் ஆற்றல்மிக்க ஒரு தலைவன் இந்தியாவில் யார்? இவரைத் தவிர. இத்தனை பெருமைக்கும் சொந்தக்காரர்.

### விளையாட்டுத் துறையில் இத்தனை சாதனைகளா!

இன்றைக்கு அவருடைய மகன், இந்த இயக்கத்தை எதிர்காலத்தில் வழிநடத்த இருக்கிறார்; இப்போது தமிழ்நாட்டு இளைஞர்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். நான் அவரை தலைமை தாங்கி நடத்த வேண்டும்; தகுதி உங்களுக்கு இருக்கிறது என்று சொல்வதற்கு காரணம் என்ன? கலைஞரின் பேரன் என்பதற்காக மட்டுமா; முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மகத்தான மனிதருடைய பிள்ளை என்பதற்காக மட்டுமா; அவையெல்லாம் தொடர்புக்குரிய காரணிகள் Relavent factors... அதையும் தாண்டி ஆட்சியையும் - கட்சியையும் வழிநடத்தும் ஆற்றல் எதிர்காலத்தில் அவருக்கு உண்டு.

அவர் ஆட்சியில் என்னென்ன பணிகளை ஆற்றி இருக்கிறார்? விளையாட்டுத் துறையை வைத்துக்கொண்டு, இத்தனை சாதனைகளைச் செய்த ஒரு அமைச்சரை நான் இந்தியாவிலேயே பார்த்ததில்லை. நெடுஞ்சாலை போடுகிறார் அமைச்சர் வேலு என்றால், ஒப்புக் கொள்ளலாம்; அனைத்து நகரங்களுக்கும் தண்ணீர் வருகிறது என்றால், நாம் அமைச்சர் நேருவை ஒப்புக் கொள்ளலாம். அனைத்துக் கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் செல்கிறது என்றால், அமைச்சர் ஐ.பி.யை ஒப்புக் கொள்ளலாம். இவை அனைத்தும் தெரிந்த துறைகள்.

ஆனால், விளையாட்டுத் துறையில் இவ்வளவு விந்தைகளைச் செய்யும் ஆற்றலைப் பெற்ற ஒரு அமைச்சரை, தம்பி; உங்களைத்தான் நான் பார்க்கிறேன். எத்தனை திட்டங்கள்!

**● தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன் டிரஸ்ட் (*Tamil Nadu Champions Foundation* )**

**● போட்டிக்குச் செல்வதற்கு முன்பாகவே ஊக்கத்தொகை,**

**● தேசிய முதல் ஒலிம்பிக் வரை யார் பதக்கம் பெற்றாலும், அவர்களை அழைத்து வந்து பதக்கம்.**

**● எலைட் ஸ்போர்ட்ஸ் பெர்சன்ஸ் ஸ்கீம் (*Elite sports persons scheme*)**

**● உலகப் போட்டியா? ஒலிம்பிக் போட்டியா? அனைத்துச் செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்ளும்.**

**● இன்டர்நேஷனல் மெடல் ஸ்கீம், (*International Medal Scheme*)**

**● ஒரு வீரரை தயார் செய்வதற்கு ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய்.**

சாம்பியன் டெவெலப்மென்ட் (*Champions Development Scheme - CDS*) என்றொரு திட்டம் - 20 வயதுக்கு உட்பட்டவர்களை எதிர்காலத்தில் தயார் செய்வதற்கு.

இவை எல்லாம்கூட நான் ஏற்றுக் கொள்கிறேன். மற்றவர்களைப் போல் சாதாரண சிந்தனையில்கூட வந்திருக்கக் கூடும். தலைவருக்கு பக்கத்தில் இருக்கிறீர்களே... அவரிடம் சொல்லி இன்னொரு வேலையைச் செய்தீர்களே...

### கலைஞர் என்ற மகத்தான மனிதர்!

இன்றைக்கு நான் பெரம்பலூரில் இருந்து கிளம்பினேன். கை, கால் இரண்டும் நடக்க முடியாமல் குழந்தை போன்று ஒருவர் தவழ்ந்து வந்தார். “ஏன் ஐயா, சொல்லியிருந்தால் நான் வந்து கையில் இருக்கும் மனுவை வாங்கி இருப்பேனே?” என்று கேட்டேன். “நான் மனு கொடுக்க வரவில்லை. நான் ஒரு பட்டதாரி ஆசிரியர்” என்றார் அவர். ”பிறகு எதற்காக வந்தீர்கள்?” என்று கேட்டேன். ஒரு லாமினேட் செய்யப்பட்ட காகிதத்தை காட்டினார். “உள்ளாட்சி அமைப்பில் நான் இன்றைக்கே ஒரு கவுன்சிலராக ஆக்கப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் உதயநிதி ஸ்டாலின். தன்னுடைய தந்தையிடத்தில் சொல்லி எனக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்”. நான் எண்ணிப் பார்க்கிறேன், நொண்டி என்றார்கள்; முடம் என்றார்கள்; குருடன் என்றார்கள்; செவிடன் என்றார்கள். ஐ.நா. மன்றம் அவர்களை அவ்வாறு சொல்லக் கூடாது; ‘மாற்றுத் திறனாளிகள்’ என்று சொல்லச் சொன்னது. ஐ.நா. சொன்ன அந்தக் கட்டளையை இந்தியாவில் எந்த முதலமைச்சரும் பார்க்கவில்லை, கேட்கவில்லை, நிறைவேற்றவில்லை. ஆனால், கலைஞர் என்ற மகத்தான மனிதர்தான் இந்தியாவில் அவர்களை ‘மாற்றுத் திறனாளி’ என்று அழைத்தது மட்டுமல்ல; அவர்களுக்கு ஒரு தனித் துறையை உருவாக்கினார். அவருடைய பேரனால் இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளி ஒருவர் தேர்தல் இல்லாமல் உள்ளே செல்கிறார்.

இப்போது சொல்லுங்கள்... கலைஞருக்கு - முதலமைச்சருக்கு, உதயநிதி ரத்த வாரிசு மட்டுமா? இல்லை, அவர்கள் அவர் கொண்டிருக்கும் லட்சியத்திற்கும் வாரிசு. இத்தனையும் செய்திருக்கிறார் ஆட்சியில். இதற்காகக்கூட உங்களை நான் தலைவர் பதவிக்கு தகுதி பெற்றவர் என்று சொல்லமாட்டேன். இவையெல்லாம் மற்ற அமைச்சர்களும்கூட செய்யலாம்.

### மண்டியிடாத வீரன் உதயநிதி!

உங்களை இன்னொரு கோணத்தில் பார்க்கிறேன். சனாதனத்திற்கு மண்டியிட மாட்டேன் என்று சொன்னீர்களே; சனாதனம் குறித்து பேசியதற்காக உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு; இந்தியாவில் 10-க்கும் மேற்பட்ட உயர்நீதிமன்றங்களில் வழக்கு. பயந்தாரா? என்ன செய்யப் போகிறோம் என்று திகைத்தாரா? சிறை என்றால் - சிலுவை என்றால் தூக்கிச் சுமப்பதற்கு எத்தனை பேருக்கு முடியும். எதிர்த்து நின்றார்; மண்டியிட மாட்டேன்; கொள்கையோடு இருப்பேன் என்றார். அப்படிப்பட்ட வீரன் நீங்கள். அதற்காக உங்களை நான் ஏற்கிறேன்.

‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, பெரியார் குறித்து, அண்ணா பற்றி, கலைஞர் மீது - முதலமைச்சருக்கு எதிராக தத்துவங்களை திரித்து, பொய்ப் புகார்கள் - அவதூறுகள் அள்ளி வீசப்பட்ட நேரத்தில், அதற்குப் ‘பொய்ப் பெட்டி’ என்று பெயர் கொடுத்து, நாடறிந்த பேச்சாளர்களை அழைத்து வந்து, அவர்களுக்கெல்லாம் விளக்கம் சொல்லி, ‘முரசொலி’யில் பிரசுரித்து வெளிச்சம் போட்டு உடைத்தீர்களே, அந்த வித்தையை உங்களுக்கு யார் கற்றுக் கொடுத்தது!

### அறிவின் மீதும், லட்சியத்தின் மீதும் உங்களின் தாகம்!

‘பாசறைப் பக்கம்’ - முரசொலியில் கடைசிப் பக்கம். இயக்கத்திற்காக உழைத்தவர்கள் யார்; அவர்கள் சொன்ன சிந்தனை என்ன; அந்தச் சிந்தனையை எப்படி வரையறுத்தார்கள்; அவர்கள் போட்ட தடத்தில் நாம் தத்துவம் பிறழாமல் எவ்வாறு நடந்து செல்வது; இதற்கென்று ஒரு பக்கம் ‘முரசொலி’யில். யார் கற்றுக் கொடுத்தார்கள்! அறிவின் மீது உங்கள் தாகம்; லட்சியத்தின் மீது உங்கள் மோகம். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம்; புத்தகத்தைப் படியுங்கள் என்று “முத்தமிழறிஞர்” பெயரில் ஒரு பதிப்பகம். காரல் மார்க்சைப் பற்றி புத்தகமாக வருகிறது. பெரியாரை அங்கு புத்தகமாகப் பார்க்கிறேன்; பேரறிஞர் அண்ணாவை அதிலிருந்து வாசிக்க முடிகிறது; டிராட்ஸ்கி பார்க்கிறபோது புது மார்க்சியம் பேசுகிறது; யார் அம்பேத்கர்; எது சாதி ஒழிப்பு; இத்தனைக்கும் சிறு நூல்கள், முத்தமிழறிஞர் பதிப்பகத்தில். அதை உங்களுக்குள் விதைத்தது யார்? அது மட்டும்தானா...? கருத்தரங்கம்; புத்தகக் கண்காட்சி. ஆண்டவனுக்கு திருவிழா இந்த மண்ணில் நடக்கிறது. ஆனால், அறிவுக்குத் திருவிழா நடத்திய ஒரே அரசியல் தலைவன் நீ மட்டும்தான்... நீ மட்டும்தான்!

### காவலன் எவனோ அவனே தலைவன்!

சிலி நாட்டில் ‘பாப்லோ நெருடா’ என்ற ஒரு சிவப்புக் கவிஞன். இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்றான். சிவப்புச் சிந்தனையில் தன்னை பிணைத்துக் கொண்டான், கம்யூனிஸ்ட்காரன். பல நாடுகளுக்கு ரகசியமாக ஓடினான்; துரத்தப்பட்டான். அவன் மறைவதற்கு முன்னால், “நீங்கள் இந்த உலகிற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?” என்று கேட்டார்கள். அவன் சொன்னான், “ஒரு தத்துவ ஆறு தலைமுறையைத் தாண்டிப் பயணிக்கிறபோது, கரையைப் பலப்படுத்தி, காவல் காக்கிற காவலன் எவனோ, அந்தக் காவலன்தான் அந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கத் தகுதியுடைய தலைவன்” என்று சொன்னான்.

பெரியார், அண்ணா, கலைஞர் உருவாக்கிய தத்துவ ஆறு, முதலமைச்சரின் தலைமையில் ஓடிக்கொண்டே இருக்கிறது; அந்த தத்துவ ஆற்றின் கரையைப் பலப்படுத்திக் கொண்டே இருக்கிறார் உதயநிதி. பாப்லோ நெருடா சொன்னான், ‘அந்தக் காவலன்தான் தலைமைக்குத் தகுதியுள்ளவன்‘ என்று. அதனால் நான் உரிமையோடு ஒருமையில் அழைக்கிறேன், “தம்பி வா... எதிர்காலத்தில் இந்த இயக்கத்தை நடத்து... வாழ்க... வெல்க...”

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. உரையாற்றினார்.